

தொலைக்குச வள்ளலார்



தலைவர் கலைஞர்

கேரளத்து வள்ளலார்



தலைமைக் கழக வெளியீடு :

திராவிட முன்னேற்றக் கழகம்

அண்ணா அறிவாலயம்

சென்னை - 600 018

முதற்பதிப்பு மார்ச் 1994

விலை : ரூ. 3/-

அச்சிட்டோர்:
ரவி டிரேடிங் கார்ப்பரேஷன் பிரிண்டிங் பிரஸ்,
183 டாக்டர் நடேசன் சாலை
சென்னை போன் 842816

இந்நூல்....

புத்தன் தொடங்கிய பண்பாட்டுப் பாதுகாப்புப் போர் இரண்டாயிரம் ஆண்டுகளாய்த் தொடர்கிறது. களங்கள் மாறுபட, கருவிகள் வேறுபடப் போர் தொடருகிறது. சிலவற்றில் தோல்வி - சிலவற்றில் வெற்றி.

அப்பரடிகள், சித்தர்கள், ராமலிங்க அடிகள், வரிசையில் கேரளத்தின் எழுஞாயிறு நாராயணகுருவும் இப்போர்வீரர்களில் ஒருவர்.

'தன்னை உணர்தலே தலையாய வழிபாடு' என்ற இத்தொண்டரின் நினைவு நாளில் தலைவர் கலைஞரவர்கள் ஆற்றிய உரையே இந்நூல்.

ஆட்சியைத் துறந்து புத்தனும், அரசனையே எதிர்த்து அப்பரடிகளும், பற்றற்ற தொண்டராக நாராய குருவும் நின்ற களங்களில் கலைஞரவர்கள் மட்டும் ஆட்சித் தலைவராய் - தமிழ் மொழியைக் காக்க மத்தியஅரசை எதிர்த்த போராட்ட வீரராய் - நூற்றாண்டுக் காலமாய் சனாதனப் பண்ணயம் நடத்திய ஆதிக்க வல்லூறுகளை எதிர்த்துச் சிறைசென்ற தொண்டனாய் - பன்முகப்போர் நடத்திப் பலவற்றில் வெற்றியும் கண்டவர்கள்.

மாபெரும் கலாச்சாரப் புரட்சியை முன்னெடுத்துச் செல்லும் தளகர்த்தர் - பழம்பெரும் போர்வீரனைப்பற்றி சொல்லும் நூல் இது.

என். செல்வேந்திரன்,
வெளியீட்டுச் செயலாளர்,
தி.மு.க.

கேரளத்து வள்ளலாரான நாராயணகுரு அவர்களின் நினைவு போற்றும் நிகழ்ச்சியில் முன்னாள் மராட்டிய ஆளுநர் திரு சி. சுப்பிரமணியம் ஆற்றிய உரையும் அதனைத் தொடர்ந்து தலைவர் கலைஞர் ஆற்றிய உரையும்

[1994, பிப்ரவரி 19 அன்று சென்னையில் 'குருதேவ தர்மம்' நூல் வெளியீட்டு விழாவில்]

சி. சுப்பிரமணியம் ஆற்றிய உரை

சாதி ஆதிக்கம் – தீண்டாமை போன்ற கொடுமைகளை எதிர்த்து ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கப் புரட்சி செய்தவர் நாராயணகுரு என்று அவ்விழாவில் பேசிய மராட்டிய மாநில முன்னாள் ஆளுநர் சி. சுப்பிரமணியம் கூறினார்.

குருதேவ தர்மம் இதழை வெளியிட்டு மகாராஷ்டிர மாநிலத்தின் முன்னாள் ஆளுநர். சி. சுப்பிரமணியம் பேசியதாவது:–

இந்த விழாவில் கலந்துகொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். பல வருடங்களுக்குப் பிறகு நானும், கலைஞரும் ஒரே மேடையில் இருக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. நான் அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்டவன். கலைஞர் இன்னும் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டுள்ளவர். இந்த இரண்டு பேரையும் இன்று சேர்த்து வைத்திருக்க கூடிய சக்தி நாராயணகுருவின் சக்தி.

நாராயணகுருவை இரண்டு கோணங்களில் பார்க்கலாம். ஒன்று ஆன்மீகத் துறையிலே. இன்னொன்று சமூக சீர்திருத்தத் துறையிலே. முதலில் அவர் ஆன்மீகத் துறையில் ஈடுபட்டு பின்னர் இந்த சமூகசீர்திருத்தத் துறையிலே இறங்கினார்.

விவேகானந்தர் சொன்னதென்ன?

கேரளாவைப்பற்றி சுவாமி விவேகானந்தர் சொன்னார். அது ஒரு பைத்தியக்காரர்கள் வாழுகிற இடமாக காட்சியளிக்கிறது என்று சொன்னார். அதற்குக் காரணம் அங்கு தீண்டாமை மட்டும் அல்ல. அதாவது தீண்டப்படாதவர்கள் பார்க்கப்படக் கூடாதவர்கள் என்றும் இருந்தது. இது

மாதிரி ஒரு சமுதாயம் இருக்க முடியுமா என்று அவர் ஆச்சரியப்பட்டார்.

சாதி ஆதிக்கத்தை ஒழித்தவர்

அப்படி கேரளவில் இருந்த சமுதாய சூழ்நிலைகளை மாற்றி ஒரு புதிய சமுதாயமே ஏற்படக்கூடிய புரட்சியைச் செய்தவர் நாராயணகுரு. இதிலே தீண்டாமையும், பார்க்காமையும் மதத்தின் பெயரால் ஏற்பட்டிருந்தது அதை வைத்துக் கொண்டு பெரிய சாதிக்காரர்கள் என்று சொல்லிக் கொண்டவர்கள் ஆதிக்கம் செலுத்திவந்ததை மாற்றி அமைத்தவர் நாராயணகுரு.

கலைஞர் நினைப்பது எனக்குத் தெரியாது!

அதேபோன்று தமிழ்நாட்டில் பெரியார் அவர்கள் பெரிய பிரச்சாரம் செய்து இந்தச் சமூகத்திலே சீர்த்திருத்தம் ஏற்பட வேண்டும் என்று பாடுபட்டவர். இந்த இரண்டு பேருக்கும் பெரிய ஒற்றுமை, வைக்கம் சத்தியாகிரகத்தில் இருவரும் இருந்தவர்கள். இருப்பினும் நாராயணகுரு கேரளாவில் ஏற்படுத்திய புரட்சியைப் போன்று தமிழ்நாட்டில் ஏற்படுத்தவில்லை, என்பதுதான் என்னுடைய கருத்து. அதற்குக் காரணம் பெரியார் மதத்தை எதிர்த்தது. கடவுளில் நம்பிக்கை இல்லாதது என்று அவர் இயக்கத்தை நடத்திய காரணத்தால் தான் அங்கு ஏற்பட்டது போன்று இங்கு ஏற்படவில்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. கலைஞர் என்ன நினைக்கிறாரோ எனக்குத் தெரியாது.

மகாத்மாகாந்தி கடவுளின் பெயரிலும், இந்து மதத்திலும் நம்பிக்கை உடையவர். அவர் தீண்டாமையைப் பற்றி எடுத்துச் சொன்னார். அவர் அரிசன இயக்கத்தை இந்தியா முழுதும் நடத்தி, நாம் சுதந்திரம் பெற்றதற்கு பிறகு, முன்பெல்லாம் தொட்டால் பாவம் என்கின்ற நிலைமைமாறி, தொடமாட்டோம் என்று சொன்னால் குற்றம் என்கின்ற

அளவுக்கு அரசியல் சட்டத்தில் மாற்றம் ஏற்பட்டது என்றால் இந்த பெரிய இயக்கங்கள் நடைபெற்ற காரணத்தால்தான்.

கவலை தரும் மதவெறி!

ஆனால் இன்றைக்கு மதவெறி, நாட்டில் மிக முக்கிய மான விஷயமாக எல்லோர் மனதையும் கவர்ந்திருப்பது மட்டுமல்லாமல் கவலைக்கும் உள்ளாக்கியிருக்கிறது.

இந்த மதவெறி மோதலை ஏற்படுத்தக்கூடியது. இதற்கும் நாராயணகுரு வழி காட்டியிருக்கிறார். அவருடைய ஆசிரமத்தில் எல்லா மாதத்தினரும் இருந்திருக்கிறார்கள். எம் மதமும் சம்மதம் என்கின்ற அந்த நிலையில் வாழ்ந்தவர் அவர்.

நம்நாட்டில் மதப்பிரச்சினை ஒரு கவலைக்குரிய தாகவே உள்ளது. நாராயணகுருவின் வாழ்க்கைத் தத்துவத்தை எல்லோரும் உணர்ந்தால் இன்றைக்கு நாட்டில் இருக்கக்கூடிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு அது உதவும் என்ற வகையில் இன்றைக்கு இந்த குருதேவ தர்மம் இதழை வெளி யிடுகிறார்கள். அதை வெளியிட எனக்கு வாய்ப்புக் கிடைத்ததற்கு மகிழ்ச்சியடைகிறேன்.

இங்கே பெரும் திரளாகக் கூடியிருக்கிறீர்கள். நீங்கள் எல்லோரும் கலைஞர் வந்திருப்பதால் திரளாக வந்திருக் கிறீர்கள். என்னை இந்தவிழாவிற்கு அழைத்தபோது கேட்டார்கள், "நாங்கள் கலைஞரை அழைக்கலாம் என்று இருக்கிறோம். அதற்கு உங்களுக்கு எதாவது ஆட்சேபம் இருக்கிறதா?" என்று கேட்டார்கள். "இல்லை, இல்லை. நான் மிகவும் வரவேற்கிறேன். அதிலும் நாராயணகுரு விழாவில் அவர் கலந்துகொள்வாரேயானால் அதற்கே ஒரு தனி மகத்துவம் ஏற்படும்" என்றுதான் நான் சொன்னேன்.

பெரியார் அவர்கள் ஏற்படுத்திய சமூகப்புரட்சி தமிழ்நாட்டில் வேரூன்றி இருந்தாலும்கூட, கடவுளுக்கு

எதிராகச் செய்த பிரச்சாரம் அவ்வளவாக வேரூன்றவில்லை என்பதை அவர்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டிருக்கும் கட்சிகள் இன்றைக்கு நடந்து கொள்கின்ற முறையிலிருந்து தெரியும்.

ஒரு சின்ன நிகழ்ச்சியை கூறுகிறேன். அது பேரறிஞர் அண்ணாவைக் குறைகூறுவதற்காக அல்ல. அவருடைய பெருமையைச் சொல்வதற்காகச் சொல்கிறேன். அண்ணா புற்றுநோய் வாய்ப்பட்டு இருந்தபோது சிலநண்பர்கள் அவரிடம் சென்று, சொன்னார்கள் "இது மாதிரி ஒரு பெரிய நோய் ஏற்பட்டிருக்கும்போது ஒரு தெய்வகருணையும் இருந்தால் ஒருசமயம் இந்தநோய் தீருவதற்கு வழி ஏற்படலாம். திருத்தணி முருகனுக்கு பொங்கல் வைத்து, பூசை செய்து அந்த பிரசாதத்தை நீங்கள் சாப்பிடவேண்டும்" என்று சொன்னார்கள்.

இதைப் பற்றி என்னிடத்திலும் அண்ணா சொன்னார். "இப்படிச் சிலர் சொன்னார்கள். நானும் சரி என்று அந்த பொங்கலை நான் சாப்பிட்டேன்." என்று சொன்னார் அண்ணா.

அந்த நிலையில்ததான் இன்றைக்கு மற்ற சமூக சீர்திருத்தங்கள் ஒரு நிலையாக இருந்தாலும் கூட, கடவுளிடத்திலே நம்பிக்கை இல்லை என்கின்ற இந்த நாத்திக இயக்கம் பலமானமாகத்தான் இன்றைக்கு இருக்கிறது. கடவுள் பெயரில் நம்பிக்கை உடையவர்கள் இன்றைக்கு அதிகமாகிக்கொண்டிருக்கிறார்கள். எந்தக் கோயிலுக்குப் போனாலும் கூட்டம் நிரம்பி வழிகிறது.

அறிவியல் அவசியம்

பெரியார் அவர்கள் வினாயகர் சிலையை போட்டு உடைத்து அதை ஒரு பெரிய இயக்கமாக நடத்தவேண்டும் என்று சொன்னார். ஒரு இடத்தில் வினாயகர் சிலையைப்

போட்டு உடைத்தார். அதற்கு எதிர்ப்பாக ஏராளமான வினாயகர் கோயிலை எழுப்பினார்கள். ஆக ஆன்மீக சக்தியை நாம் ஒதுக்கிவிட முடியாது. அறிவியல் மிகவும் அவசியம். இந்த இரண்டும் ஒன்றுக்கு ஒன்று சேரும் போதுதான் மனிதனுக்கு உணர்வு ஏற்படும்.

ஆகையினால் மனிதசமுதாயம் முன்னேறவேண்டும் என்று சொன்னால் இந்த இரண்டு சக்திகளும் இணைந்து இயங்கவேண்டும். அப்படி இயங்கினால்தான் மனித சமுதாயத்தில் சமாதானம் ஏற்பட முடியும். மக்கள் நல்வாழ்வு வாழ முடியும் என்பதை நாம் உணர்ந்து அந்த அடிப்படையில் மதத்தின் காரணமாக இருக்கக்கூடிய மூடநம்பிக்கைகளை விளக்குவதற்கு அறிவியல் உதவ வேண்டும். அறிவியலை நல்ல முறையில் பயன்படுத்தி அழிவுசக்தியாக அது இருக்கக் கூடாது என்பதற்கு ஆன்மீகம் பயன்படவேண்டும் என்ற முறையிலே இந்த இரண்டு சக்திகளும் மனிதசமுதாயத்தை மேலே உயர்த்த உதவவேண்டும் என்கின்ற கருத்தை வலியுறுத்தி இந்த விழாவில் கலந்துகொள்ள வாய்ப்பளித்த தற்கு நன்றியைத்தெரிவித்து கலைஞர் அவர்கள் இங்கு வந்திருப்பதற்கும் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு சி. சுப்பிரமணியம் பேசினார்.

தலைவர் கலைஞர் ஆற்றிய உரை



'குருவேத தர்மம்' நூல் வெளியீட்டு விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

சமதர்ம அறக்கட்டளையின் சார்பாக 'குருதேவ தர்மம்' என்ற திங்கள் இதழை வெளியிடுகின்ற இந்த விழாவுக்குத் தலைமை ஏற்கின்ற ஒரு நல்ல வாய்ப்பினை எனக்கு வழங்கிய இந்த அறக்கட்டளை நிர்வாகிகளுக்கு நன்றியையும், வணக்கத்தையும் தொரிவித்துக் கொள்கிறேன். இங்கே சி.எஸ். அவர்கள் பேசும்போது "எங்கள் இருவரையும் ஒரே மேடையில் பக்கத்தில் பக்கத்தில் அமரவைக்கின்ற சக்தி நாராயண குருவுக்கு இருக்கிறது" என்று குறிப்பிட்டார். 1957-ஆம் ஆண்டில் அவரும் நானும் தமிழக சட்டப் பேரவையில் எதிரெதிரே அமர்ந்திருந்தோம். அவர் அப்போது நிதி அமைச்சர். பெருந்தலைவர் காமராசர் முதலமைச்சர். முதலமைச்சருக்கும் சேர்த்து அன்றைக்கு பேரவையிலே பதிலளிக்கக் கூடிய வாய்ப்பும், வாய்மையும் அறிவும், ஆற்றலும் பெற்றவர் சி.எஸ். அவர்கள்.

அரசியல் நாகரிகமிருந்த அந்தக் காலத்துப் பேரவை!

எங்களுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாமல் எதிர்த்துப் பேசுகிற நேரத்தில்கூட, தமிழர்களுக்கே உரிய பண்பாடும், அரசியல் நாகரிகமும் அவருடைய பேச்சில் இருக்கும். இதெல்லாம் அந்தக் காலத்து சட்டப் பேரவையைப் பற்றிச் சொல்கிறேன். (பலத்த கைதட்டல்)

அவர் 57-ஆம் ஆண்டில் முதல் நிதிநிலை அறிக்கையை பேரவையில் வைத்தபோது "நான் இன்றைக்கு சதம் அடிக்

கிறேன்'' என்று சொன்னார். சதம் அடிக்கிறேன் என்றால் நூறு. முதன் முதலாக நூறு கோடி ரூபாய்க்கான நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே வைக்கிறேன் என்று சொன்னார். 1957–ஆம் ஆண்டு நூறு கோடி ரூபாய்க்கு நிதிநிலை அறிக்கை வைப்பது அவ்வளவு பெரிய அதிசயமாக இருந்தது. ஆனால் அந்த நூறு கோடி ரூபாய் நிதிநிலை அறிக்கையில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும், காரியங்களையும் இன்றைக்கு ஐந்தாயிரம் கோடி, ஆறாயிரம் கோடி நிதிநிலை அறிக்கையிலே செய்யப்படுகின்ற காரியங்களையும், திட்டங்களையும் ஒப்பிட்டுப்பார்க்கும் போது; இதற்குமேல் விளக்கினால் அரசியல் ஆகிவிடும். இது ஒரு ஆன்மீகவிழா என்று அவர்களே பேசும்போது சொல்லியிருக்கின்றார்கள்.

ஆன்மீகத்திற்கு நான் விரோதி அல்ல. அதே நேரத்தில் ஆன்மீகத்தை பயன்படுத்திக்கொண்டு, அதை ஒரு போர்வையாகப் போர்த்திக்கொண்டு மக்களை மாக்களாக்க விரும்புகின்ற அந்தச் செயலுக்குத்தான் நானும் நான் சார்ந்துள்ள இயக்கமும் விரோதியே தவிர, ஆன்மீகத்திற்கு நாங்கள் என்றைக்கும் விரோதிகளாகச் செயல்படுகிறவர்களல்ல!

ஒன்றே குலம்; ஒருவனே தேவன் என்ற கருத்தில் சொல்லியிருப்பார்!

இங்கே சி.எஸ். அவர்கள், "தந்தை பெரியார் பிள்ளையார் சிலையைப் போட்டு உடைத்தார். அதற்குப்பிறகு ஏராளமான பிள்ளையார் கோயில்கள் தோன்றின" என்று சொன்னார். அதை மகிழ்ச்சியோடு சொன்னாரா அல்லது வருத்தத்தோடு சொன்னாரா என்று தெரியவில்லை. உடைக்காமல் இருந்திருந்தால் இவ்வளவு பிள்ளையார் வந்திருக்காதே என்ற அந்த ஆதங்கத்தோடுதான் சொல்லியிருப்பார் என்று கருதுகிறேன். ஏனென்றால் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதை அவரும் ஏற்றுக் கொண்டவர். எனவேதான் அந்தக் கருத்தில் சொல்லியிருப்பார் என்று கருதுகிறேன்.

அண்ணா சொன்னது என்ன?

அப்பொழுது எங்கள் தலைவர் அண்ணா, பெரியாரை தலைவராக ஏற்றுக்கொண்டு இயக்கம் நடத்திய அண்ணா அவர்கள், இந்த இயக்கத்தின் சார்பாக என்ன கருத்தைச் சொன்னார் என்பதை சி.எஸ். அறியாதவர் அல்ல. அப் போது அண்ணாவைப் பார்த்து கேட்டார்கள். பெரியார். பிள்ளையார் சிலைகளை தெருவில் போட்டு உடைக்கிறாரே; நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்'' என்று கேட்டபோது அண்ணா சொன்னார்– ''நான் பிள்ளையார் சிலையையும் உடைக்கமாட்டேன் பிள்ளையாருக்கு தேங்காயும் உடைக்க மாட்டேன்'' என்று சொன்னார். அதுதான் இந்த இயக்கத்தின் கொள்கை, நடைமுறை.

அதைப்போல இன்னொன்றையும் சி.எஸ். அவர்கள் சொன்னார். அண்ணா அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த போது திருத்தணியில் முருகனுக்கு நைவேத்தியம் செய்து அந்தப் பொங்கலைக் கொண்டுவந்து அண்ணாவிடம் கொடுத்தார்கள். இதைச் சாப்பிட்டால் நோய்தீரும் என்று கூறினார்கள். அண்ணா அதையும் வாங்கி உண்டார் என்று சி.எஸ். குறிப்பிட்டார்.

மாற்றாரின் மனம் நோகாதிருக்க 'பிரசாதம்' சாப்பிட்ட அண்ணா!

பெரியார் பழுத்த நாத்திகர் என்றாலும்கூட, கடவுள் நம்பிக்கை அறவே இல்லாதவர் என்றாலும்கூட அவை நாக ரீகம் மற்றவர்களை மதிக்கின்ற மாண்பு உடையவர் என்பது சி.எஸ். அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவருடைய கையிலேயே சில நேரங்களில் திருநீறு கொடுப்பதும் உண்டு. அதை மரியாதையாக வாங்கி மற்றவர்களிடத்திலே பெரியார் அவர்கள் கொடுப்பது உண்டு. திருநீறா தொடமாட்டேன் என்று அவர் மறுத்தது கிடையாது. அதைப்போலத்தான்

அண்ணா அவர்கள் திருத்தணியிலே முருகனுக்கு நைவேத்தியம் செய்த பிரசாதத்தை நோய்தீரும் என்று கொடுத்தார்கள். அதை வாங்கிச் சாப்பிட்டபோது நோய் தீருகிறதோ இல்லையோ கொண்டுவந்து கொடுப்பவர்கள் மனம் புண்படக்கூடாது என்பதற்காக அதை வாங்கி அருந்தியிருக்கலாம். இன்னொன்றும் இருக்கலாம். அண்ணாவுக்கே தெரியும். நோய் தீராது. விரைவில் நம்மிடமிருந்து விடை பெற்றுக் கொள்ளப் போகிறோம் என்ற உண்மை அண்ணாவுக்கே தெரியும். காரணம் பெரிய சிகிச்சைக்கெல்லாம் பிறகுகூட மேலும் மேலும் அந்த நோய் கிளைத்து கிளைத்து கிளம்பிவிட்ட காரணத்தால் அந்த நோயைப்பற்றி நிரம்ப நூல்களைப் படித்த அண்ணா அவர்கள், ஏற்கனவே அவருடைய வீட்டிலே ஒருவருக்கு அந்த நோய் ஏற்பட்டு அதன் காரணமாக அந்த புற்றுநோய் பற்றிய தகவல்களை படித்த அண்ணா அவர்கள் இறுதி முடிவு இதுதான் என்று தெரிந்திருந்த காரணத்தால் அதை வாங்கிச் சாப்பிட்டார். எதற்காக சாப்பிட்டிருப்பார் என்றால், நாம் எப்படியும் பிழைக்கப் போவதில்லை. அவர்களுடைய மனம் வருந்தக்கூடாது என்பதற்காக சாப்பிடுகிறேன். ஆண்டவனுக்குப் படைத்த பிரசாதத்தைச் சாப்பிட்டாலும் அதனால் நோய்தீர்ந்து விடாது என்பதை காட்டுவதற்காகவும் சாப்பிடுகிறேன் என்றுகூட அண்ணா அதை சாப்பிட்டிருக்கலாம். (பலத்த கைதட்டல்)

கழகத்தின் கடவுள் கொள்கை 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்'!

இவைகளையெல்லாம் சொல்லுகிற காரணத்தால் ஆண்டவன் மறுப்பு இயக்கத்தை நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று யாரும் கருதக் கூடாது. திராவிடர் கழகத்திலிருந்து, திராவிட முன்னேற்றக் கழகம் பிரிந்தபோதே பேரறிஞர் அண்ணா அவர்கள், தி.மு.கழகத்தின் கடவுள்

கொள்கை– "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதுதான் என்று பட்டவர்த்தனமாக வெளிப்படையாக அறிவித்திருக் கிறார்.

நாராயணகுரு விழாவிற்கு நாங்கள் வருகிறோம் என்றால் இது முதல் தடவை அல்ல. ஏற்கனவே திரு. நல்ல பெருமாள் அவர்கள் ஒரு நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு 88–ஆம் ஆண்டு இறுதியில் என்று கருதுகிறேன் என்னையும், நாஞ்சிலாரையும் அழைத்து வெகுவிமரிசையாக அந்த விழாவைநடத்தினார். அதிலே நண்பர் 'இந்து' ராம் போன்ற வர்களெல்லாம் கலந்துகொண்டார்கள். அந்த விழாவிலே கலந்துகொண்ட பசுமையான நினைவோடுதான் இந்த விழா விலும் நான் கலந்துகொண்டிருக்கின்றேன்.

நாராயணகுருவின் பெயர் விளங்க ஒரு தெருவுக்கு அவர் பெயர் சூட்ட வேண்டும் என்று கேட்ட மாத்திரத்தில் உடன டியாக அதை அன்று நான் ஏற்றிருந்த ஆட்சியின் சார்பாக செய்துமுடித்தற்கு இங்கே நன்றி கூறப்பட்டது. நன்றியை எதிர்பார்த்து அந்தக் காரியத்தை நான் செய்யவில்லை. ஒரு கொள்கை அடிப்படையில் நீங்கள் நினைவூட்டினீர்கள். அதைச் செய்ய வேண்டும் என்ற கடமை உணர்வோடுதான் அந்தச்செயல் புரியப்பட்டது என்பதையும் நான் நன்றி தெரிவித்த நண்பர்களுக்கெல்லாம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (பலத்த கைதட்டல்)

அடிகளாரின் காலமும்– பெரியாரின் காலமும்!

நாராயணகுருவின் காலம், வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளாரின் காலம், தந்தை பெரியாரின் காலம் இவைகளெல்லாம் ஒன்றுக்கொன்று அதிக இடை வெளியில்லாமல் தொடர்ந்து வருகின்ற காலங்களாகும். இராமலிங்க அடிகள் 1823–ஆம் ஆண்டு பிறந்து 1874–ஆம்

ஆண்டு வரையில் வாழ்ந்து மறைந்தவர். நாராயணகுரு 1854–ஆம் ஆண்டு பிறந்து 1928–ஆம் ஆண்டு வரை இருந்து வாழ்ந்தவர். பெரியார் 1879–ஆம் ஆண்டு பிறந்து 1973–ஆம் ஆண்டு வரையில் வாழ்ந்தவர். எனவே நாராயண குரு பிறந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு தந்தை பெரியார் பிறந்தார். பெரியார் வாழும் பொழுதும் நாராய்ணகுரு வாழ்ந்தார். அதைத்தான் இங்கே சி.எஸ். அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார். சச்சிதானந்தசாமி அவர்கள் பேசும் போதும் குறிப்பிட்டார். வைக்கம் போராட்டம் 1924–ஆம் ஆண்டு தந்தை பெரியார் சென்று முடுக்கிவிடப்பட்ட அந்தக் காலகட்டத்திற்குப் பிறகு மேலும் நான்கு ஆண்டுகள் நாராயண குரு வாழ்ந்து 1928–ஆம் ஆண்டுதான் மறைந்திருக்கிறார்.

நாராயணகுருவின் வாழ்க்கைச் சரித்திரத்தை நான் படித்த நேரத்தில் அவர் மிகச் சாதாரணமான சாமானியமான ஒரு குடும்பத்தில், இன்னும் சொல்லப்போனால் ஒதுக்கப்பட்ட ஒரு சமுதாயத்தில், இங்கே குறிப்பிட்டார்களே, கேரளத்தைப் பற்றி விவேகானந்தர் என்ன கருத்தைக் கொண்டிருந்தார் என்று. அப்படிப்பட்ட கேரள மாநிலத்தில் ஈழவர் சமுதாயத் திலே பிறந்து எல்லா வகையிலும் அடக்கப்பட்டு ஒதுக்கப் பட்டு தள்ளிவைக்கப்பட்ட சூழ்நிலையிலே இருந்த சமுதாயத்திலே – சாதாரண குடும்பத்திலே பிறந்தவர் நாராயணகுரு. இளம்பிராயத்தில் "நாணு" என்றுதான் அவர்களுடைய வீட்டில் அழைப்பார்கள் என்று சரித்திர குறிப்பு காட்டுகிறது. திருக்குறளில் நாணுடமை என்பதற்கு; ஒரு தவறு தன்மீது வந்துவிடக்கூடாது என்பதற்காக அஞ்சுகின்ற தன்மைக்குப் பெயர்தான் நாணுடமை என்றார் வள்ளுவர் மிகப்பொருத்தமாக. அந்த சின்னஞ்சிறு பிராயத் திலேயே நாராயணகுருவை அவரது குடும்பத்தார் நாணு என்று சுருக்கமாக பெயரிட்டு அழைத்திருக்கின்றார்கள். அவர் வளர்ந்து இன்றைக்கு நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்து விளங்குகிறார் என்றால் அவருடைய கொள்கை–கோட்பாடுகள், துணிச்சலாக, புரட்சிகரமாக எடுத்துவைத்த கருத்துக்கள் இவைகளின் காரணமாகத்தான். ஏறத்தாழ

நூற்றி நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு பிறந்து ஒரு எழுபத்து நான்கு ஆண்டுகள் வாழ்ந்த காலத்தில் கேரளத்தில் மாத்திரம் அல்லாமல் தமிழகத்திலும் உலாவி, தமிழக மாந்தர்களோடும் பழகி, தமிழையும் கற்று, தமிழிலும் அருமையான கவிதை, கட்டுரைகளை தீட்டுகின்ற வல்லவராகத் திகழ்ந்து "ஒன்றே குலம் ஒருவனேதேவன்" என்ற கருத்தையும் நிலை நாட்டியவர்.

அவர் கோயில் கட்டுவதைப் பற்றியும் அங்கே எந்த உருவத்தை வணங்க வேண்டும் என்று சொன்னார் என்பதைப் பற்றியும் நல்லபெருமாள் அவர்கள் இங்கே குறிப்பிட்டார். அவர் முதன் முதலாக ஒரு கோயிலை அருவிப்புரம் என்கின்ற ஊரிலே கட்டினார். அந்தக் கோயிலை கட்டும்போது அங்கே உள்ள நம்பூதிரிகள் எதிர்த்தார்கள். ஈழவர்களை நம்பூதிரிகள் எதிர்ப்பது என்பது அன்று முதல் இன்றுவரை நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரியம்.

எனவே அப்போதே நம்பூதிரிகள் அந்த ஈழவப் பெருமகன் நாராயணகுரு உருவாக்கிய அந்தக் கோயிலை கட்டக் கூடாது என்று பெரும் எதிர்ப்பு தொரிவித்தனர். அவர் களைப் பார்த்து நாராயணகுரு சொன்ன வாசகம் என்ன தெரியுமா? நான் நம்பூதிரிகளின் கடவுளை இங்கே பிரதிஷ்டை செய்யவில்லை. எனவே என்னை நீங்கள் யாரும் எதிர்க்க உங்களுக்கு தகுதி கிடையாது. நான் உங்கள் கடவுளை இங்கே பிரதிஷ்டை செய்யவில்லை என்று அழுத்தம் திருத்த மாக திட்டவட்டமாகக் கூறினார்.

தோல்வியை ஒப்புக் கொண்ட திவான் ராஜகோபாலாச்சாரியார்!

அவரை திருவாங்கூர் திவான் ராஜகோபாலாச் சாரியார் என்று பெயர் பெற்ற ஒருவர், அவருடைய ஆசிர மத்தில் வந்து சந்தித்தார். சந்தித்து இருவருக்கும் இடையே

ஒரு வாக்குவாதம். ராஜகோபாலாச்சாரியார் சொன்னர்– நீங்கள் ராஜாஜியை எண்ணிக்கொள்ளக்கூடாது. நான் திருவாங்கூர் சமஸ்தானத்து திவானை சொல்கிறேன். அவர் சொன்னார் சாதிப்பிரிவு என்பது இயற்கையான தத்துவம். ஒருவரைப் பார்த்தாலே இவர் என்ன சாதி என்று புரிந்து கொள்ளமுடியும் என்பது அந்த ஆச்சாரியாருடைய வாதம். ஆனால் இதை நாராயணகுரு ஏற்றுக்கொள்ளவில்லை. உடனடியாக தன்னுடைய ஆசிரமத்தில் இருந்த மாணவர்களையெல்லாம் அழைத்தார். அவர்களை அவர்கள் கற்ற சுலோகங்களைச் சொல்லச் சொன்னார். அந்த சுலோகங்களை அந்த மாணவர்கள் சொன்னார்கள். சொன்னவுடனே நாராயணகுரு அந்த ஆச்சாரியாரைப் பார்த்து கேட்டார். எல்லோரும் ஒரே மாதிரியாக சுலோகங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே வரிசையாக இருக்கின்ற இவர்களைப் பார்த்து யார் என்ன சாதி என்று உங்களால் சொல்ல முடியுமா? என்று கேட்டார். ராஜகோபாலாச்சாரியார் தலைகுனிந்து நின்றார். தன்னுடைய தோல்வியை ஒப்புக் கொண்டார். நாராயணகுருவிடத்திலே மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

இப்படி ஒரு செயல்பாட்டின் மூலமாக தன்னுடைய தத்துவத்திற்கு, தன்னுடைய கொள்கைக்கு வெற்றியைத் தேடுகின்ற ஆற்றல் பெற்றவராகவும் நாராயணகுரு இருந்தார். அவர் அந்த ஒரு கோயில் மாத்திரம் அல்ல. அருவிப்புரம், குளத்தூர், திருச்சூர், பாலக்காடு, கண்ணனூர் என்று சுமார்பத்து அல்லது பன்னிரெண்டு கோயில்களைக் கட்டினார். இந்த பன்னிரெண்டு கோயில்களும் கட்டி முடித்த பிறகு அவருடைய மாணவர்கள் மேலும் கோயில்களைக் கட்டுவதற்கு இடங்களைத் தேர்ந்தெடுத்துவந்த பிறகு அவர் சொன்னார். இதோடு போதும் கோயில் என்றார். இதைத் தான் நாங்களும் சொல்கிறோம். இருப்பது போதும் என்று சொல்கிறோம்.

கோயில் கட்டுவதை நிறுத்தி பள்ளிக் கூடங்கள் கட்டுங்கள்!

பன்னிரெண்டு கோயில் பதிமூன்று கோயில் கட்டிய பிறகு மேலும் கோயில் கட்ட இடம் பார்த்தபோது இதோடு கோயில் போதும். இனிமேல் கட்டுவதெல்லாம் பள்ளிக் கூடங்களாக இருக்கட்டும் என்று சொன்னவர் நாராயண குரு. அவர் கட்டிய கோயில்களில் எந்த உருவத்தையும் வைத்து அவர் வணங்கச் சொல்லவில்லை.

அவர் கட்டிய கோயில்களில் எழுதப்பட்டவாசகம் சத்தியம், தயை, தர்மம். இதைத்தான் நாம் சரியான தமிழ்ச் சொல்லை புரிந்து கொள்ளாமல் போட்டு குழப்பிக் கொண்டிருக்கிறோம். சத்தியம் என்பது–வாய்மை அல்லது உண்மை. தயை–இரக்கம், தர்மம் என்றால் இன்னும் சரியான பொருள் அளிக்கப்படவில்லை. தர்மம் என்றாலே ஒருவர் ஒருவருக்குச் செய்வது தர்மம் என்கிறோம். அல்ல, தர்மம் என்பதற்கு சரியான தமிழ்ச்சொல்–நேர்மை. இதைத்தான் அந்த ஆலயங்களில் எழுதி அதை வைக்கச் சொன்னார். வாய்மை–இரக்கம்–நேர்மை. இதுதான் கடவுள் இவற்றை வணங்குங்கள் என்று சொன்னார்.

கண்ணாடியை வணங்குங்கள்!

அதற்குப் பிறகு ஒரு காலகட்டத்தில் ஒரு கண்ணாடியை பதிக்கச்செய்து அந்தக் கண்ணாடியை வணங்குங்கள் என்றார். கண்ணாடியை வணங்கினால் என்ன ஆகும். தன்னையேதான் வணங்கிக்கொள்வான். இதைத்தான் சிவவாக்கியர் அன்றைக்கே சொன்னார்–

"நட்ட கல்லை தெய்வம் என்று
நாலும் புட்பம் சாத்தியே
சுற்றிவந்து மொண மொணவென்று
சொல்லும் மந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ

நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம்
கறிச்சுவை அறியுமோ?"

என்று பதினெட்டு சித்தர்களில் ஒரு சித்தரான சிவவாக்கியர் சொன்னதைத்தான் நாராயணகுரு மெய்ப்பித்துக் காட்டினார். இதோ இருக்கிறான் நாதன். ஆண்டவன். நின்று பார் கண்ணாடியை! நீதான் ஆண்டவன். மனசாட்சிதான் ஆண்டவன் என்று கண்ணாடியைக் காட்டி இதுதான் கடவுள் என்று உணர்த்திய பெருமை நாராயணகுருவுக்கே உண்டு.

வேறுபாட்டிற்கும்–முரண்பாட்டிற்கும் உள்ள வித்தியாசம்!

இன்றைக்கு இருக்கின்ற சங்கடமெல்லாம் சி.எஸ். கூட வருத்தப்பட்டார். மதம் இல்லை. கடவுள் இல்லை என்று சொல்லிவிட்டு சீர்த்திருத்தங்களைச் சொன்னால் அவை ஏற்கப்படுவதில்லை என்ற கருத்தைச் சொன்னார். நான் அதில் அதிகமாக முரண்படவில்லை. வேறுபடுகிறேன். வேறுபடுவதற்கும், முரண்படுவதற்கும் பெரிய இடைவெளி உண்டு. பாலுக்கும், தண்ணீருக்கும் இடையில் உள்ளதற்குப் பெயர் வேறுபாடு. பாலையும் தண்ணீரையும் சேர்த்தால் இரண்டும் ஒன்றாகிவிடும். அது மாறுபாடு. எண்ணெய்க்கும் தண்ணீருக்கும் இடையில் உள்ளது முரண்பாடு. இரண்டையும் சேர்த்தால் தனித்தனியாகத்தான் இருக்கும். எனவே அவர் சொன்ன அந்த பாலும்–தண்ணீரும் என்கின்ற வேறுபாட்டை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அந்த வேறுபாட்டைத்தான் இங்கே நான் விளக்குகின்றேன் என்ன ஆகிவிட்டது. சிவவாக்கியர் சொன்னார் அல்லவா?

"நட்ட கல்லை தெய்வம் என்று
நாலு புட்பம் சாத்தியே
சுற்றிவந்து மொண மொணவென்று
சொல்லும் மந்திரம் ஏதடா,

நட்டகல்லும் பேசுமோ
நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம்
கறிச்சுவை அறியுமோ"

என்று கேட்டார் அல்லவா சிவவாக்கியர். என்ன செய்தார்கள் நம்மவர்கள்? அதெல்லாம் பெரியவாள் சொல்லலாம். நம் சொல்ல முடியாது என்று அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அதை ஏற்றுக்கொண்டு ஒரே கடவுள் என்பதை எண்ணிச் செயல்பட நாம் தயாராக இல்லை. அவர்களையே கடவுள்களாக ஆக்கி நாம் நம்மை ஏமாற்றிக் கொண்டோம். மற்றவர்களையும் ஏமாற்ற புறப்பட்டு விட்டோம்.

புரட்சிகரமான கொள்கையுடையோரை தெய்வங்களாக மாற்றிவிட்டோம்

உத்தமர் காந்தியடிகள் ஒரே கடவுள் உண்டு என்று சொன்னால் என்ன செய்தோம். காந்தியையே கடவுள் ஆக்கு. புத்தர்–அவரையே கடவுள் ஆக்கு. புத்த அவதாரம். மகாவிஷ்ணுவின் பத்து அவதாரத்திலே பௌத்தாவதாரம் ஒன்று என்று புத்தரையே அவதாரமாக்கி விட்டோம். மகாவீரர் அவர் ஒரு அவதாரம். நல்ல கொள்கைகளை, புரட்சிகரமான கொள்கைகளை, சமுதாயத்திற்குத் தேவையான கொள்கைகளைச் சொன்னவர்களையெல்லாம் அவர்களையே அவதாரமாக்கி அவர்களுடைய கொள்கைகளை அழித்துவிட்டோம். அவர்களுக்கு சிலை வைக்கிறோம். கோயில் கட்டுகிறோம். ஆனால் கொள்கைகள் என்ன ஆயின? அவைகள் குழிக்குப் போய் விட்டன. இன்னும் நூறு ஆண்டுகள் கழித்து பெரியாரையே, கூட தெய்வமாக ஆக்கி விடுவோமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது. (பலத்த கைதட்டல்)

நாம் ஏமாறுவதைத் தவிர மற்றவரையும் ஏமாற்றுகிறோம்.

எனவே அவர்களின் கொள்கைகளை அவர்களின் லட்சியங்களை குழிதோண்டிப் புதைக்க அவர்களைப் பெருமைப்படுத்தி, அவர்களுடைய கொள்கைகளை நாம் இன்றைக்கு இழந்து கொண்டிருக்கிறோம். எனவேதான் நான் சொல்கின்றேன். நாராயணகுருவையும் நாம் அப்படி ஆக்கி விடக்கூடாது. நாராயணகுருவை ஒரு புரட்சிக்காரராக, மறுமலர்ச்சியின் தூதுவராக, சி.எஸ். அவர்கள் குறிப்பிட்ட தைப்போல, ஆன்மீகத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் இடையில் ஒரு பாலமாக இருந்து நல்ல கருத்துக்களை மனிதன் வாழ்வதற்காக எடுத்துச் சொன்ன வித்தகராக நாம் அவரை மனதில்வைத்துப் போற்றி, அவருடைய கொள்கைகளைப் போற்றுவதின் மூலம் அவர் வழி நிற்கிறோம் என்பதை நிலை நாட்ட வேண்டுமேயல்லாமல் அவரை தெய்வமாக ஆக்குவ தால் நம்மையும் ஏமாற்றிக்கொண்டு, மற்றவர்களையும் ஏமாற்றுகின்றோம். அதை ஒரு பிழைக்கும்வழியாகவே நாட்டிலே சிலபேர் கடைபிடித்துவிட்ட காரணத்தாலேதான் இவ்வளவு அல்லல்களும் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றன.

சாதி சாதி என்று பேசுகிறோம். ஒரேசாதி. ஒரே மதம். ஒரேகடவுள் என்று அவர் சொன்னார். அதை இங்கே பேசியவர்களெல்லாம் எடுத்துக் காட்டினார்கள். இது இன்று நேற்றல்ல. ராமலிங்க அடிகள் சொல்லாததா? அவரே சொன்னார்.

"சாதியிலே மதங்களிலே
சாத்திரச் சந்தடியிலே" என்று சாடினார்!
"கண்மூடி வழக்கமெல்லாம்
மண்மூடிப் போக...." என்று கூறினார்.

எனவே, ராமலிங்க அடிகள் காலம், நாராயணகுரு காலம் அதைத் தொடர்ந்து தந்தை பெரியார் காலம். இந்த

மூன்று காலம் அதற்கு முன்பே இருந்த சித்தர்கள்காலம், புத்தர்காலம், சமணர்கள்காலம், அப்பொழுதெல்லாம் சொல்லப்பட்ட கருத்துக்களை நாம் சரியாக ஏற்றுக்கொள் ளாத காரணத்தால் அவர்களையெல்லாம் தெய்வங்களாக்கி அவர்களை வழிபடுவதற்கான முறைகளை நாம் செய்துவிட்ட காரணத்தாலேதான் இன்றைக்கு இத்தனை சாதிகள், இத்தனை மதங்கள், இத்தனை வேறுபாடுகள், மனிதநேயமற்ற மதச்சண்டைகள் நாடு முழுவதும் ரத்தக்களரி ஏற்படுகின்ற அளவிற்கு ஒருவரை ஒருவர் வெட்டிச்சாய்த்தல் ஒருவர் ஆலயத்தை ஒருவர் இடித்தல் ஒருவருடைய மதச்சின்னத்தை மற்றவர்கள் மாசுபடுத்துதல், தகர்த்தல் என்கின்ற அளவிற்கு இன்றைக்கு நிலைமைகள் ஏற்படுகின்றன.

எனது கொள்கையை மற்றவாிடத்திலே திணிக்க விரும்பவில்லை

சாதியைப் பற்றி இன்றைக்கும் நாம் பேசிக் கொண்டிருக்கிறோமே. இவ்வளவு சீர்த்திருத்தக்காரர்கள், புரட்சிக்காரர்கள் இவ்வளவு பேர் பிறந்து வளர்ந்து தொண் டாற்றியும்கூட, சாதியை மறந்துவிட்டோமா? இல்லையே. மதத்தை வைத்துத்தான் அதனுடைய நம்பிக்கையோடுதான் இவைகளையெல்லாம் செய்யவேண்டும் என்று சி.எஸ். அவர் கள் எண்ணுவதுபோல எண்ணினாலும் கூட, அதை வைத்துச் செய்ய முடியவில்லையே. அந்தக் கோபத்திலேதான் பெரியார் மதம்கூட வேண்டாம் என்றார். இதற்கெல்லாம் காரணம் கடவுள் என்றால் அந்தக் கடவுள்கூட வேண்டாம் என்றார். அப்படிச் சொல்லும்போது அதை ஏற்றுக்கொள்ள பெரும்பாலான மக்கள் தயாராக இல்லாத காரணத்தால் பேரறிஞர் அண்ணா 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன், என்பதை ஏற்றுக் கொள்கிறோம். நான் நாத்திகனா இல்லையா? தனிப்பட்ட முறையில் கடவுள் நம்பிக்கை எனக்கு உண்டா, இல்லையா என்பது வேறு விவகாரம்.

ஆனால் என்னுடைய கொள்கையை இன்னொருவருடைய உள்ளத்திலே திணிக்க நான் விரும்பவில்லை. எதையும் திணிக்கக்கூடாது என்ற கட்சியைச் சேர்ந்தவன் நான். எனவே திணிக்க விரும்பவில்லை. ஆனால் சாதியும், மதமும் நாட்டில் இந்த அளவிற்கு கேடுகளை உண்டாக்கியிருப்பதற்குக் காரணம் என்ன என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டாமா? இவைகளுக்கெல்லாம் அடிப்படையான புராணங்கள், இதிகாசங்கள் இவைகளெல்லாம் இருக்கின்றன. ஆனால் புராணங்களையோ, இதிகாசங்களையோ நாம் விமர்சித்தால் அதற்குக் கூட நாத்திகப்பட்டத்தைக் கட்டுவது சரியல்ல என்பதுதான் என்னுடைய வாதம்.

எப்படி சாதி உருவாயிற்று? வர்ணாசிரமத்தை நாட்டிலே நிலைநாட்ட வேண்டும் என்று எண்ணுகிறவர்களெல்லாம் இன்றைக்கு நாட்டிலே பெரியவர்களாக பூஜிக்கப்படவில்லையா? இங்கே நாராயணகுருவின் சிலைக்கு முன்னால் நின்று கொண்டு பேசுகிறோம். அவருடைய பெயரால் பத்திரிகை வெளியிடுகிறோம். வர்ணாசிரமத்தை வேரறுக்க வேண்டும் என்று கருதியவர் அவர். சாதி மத பேதம் கூடாது என்று கருதியவர் அவர். அதேநேரத்தில் இன்றைக்கு வர்ணாசிரமத்தை நாட்டில் நிலைநாட்ட வேண்டும் என்று விரும்புகின்றவர்களும் நாட்டில் இருக்கிறார்கள் என்பதையும் மறந்துவிட முடியுமா? என்ன காரணம் சொன்னார்கள். ஏன் வர்ணாசிரமம் நிலைநாட்டப்பட வேண்டும் என்று சொன்னார்கள்? ஏன் இத்தனை சாதிகளைச் சொன்னார்கள்?

ஐந்து சாதிகளையும் காட்டி மக்கள் ஏமாற்றப்பட்டார்கள்

பிரம்மாவின் நெற்றியில் பிறந்தவன் பிராமணன். தோளிலே பிறந்தவன் சத்திரியன், தொடையிலே பிறந்தவன் வைசியன். காலிலே பிறந்தவன் சூத்திரன், அதற்கும் கீழே

பிறந்தவன் பஞ்சமன்– உள்ளங்காலில் பிறந்திருப்பான் போலிருக்கிறது அவன். இப்படி ஐந்து சாதிகளுக்கும் பிரம் மாவைக் காட்டி மக்கள் ஏமாற்றப்பட்டார்கள். வாதத்திற்காக அப்படியே உண்மையென்று வைத்துக்கொள்வோம்.

அத்தி மரம் இருக்கிறது பார்த்திருப்பீர்கள். அத்தி மரத்தில் உச்சியிலும் காய் காய்க்கிறது. கிளையிலும் காய் காய்க்கிறது. அடி மரத்திலும் காய் காய்க்கிறது. வேரிலும் காய் காய்க்கிறது. எல்லாம் அத்திக்காய்தான். வேரில் காய்த்த காய் வெண்டைக்காய். கிளையில் காய்த்தகாய் புடலங்காய். அடிமரத்திலே காய்த்தகாய் பரங்கிக்காய் என்றா சொல் கிறோம்? எல்லாம் அத்திக்காய்தான் (பலத்த கைதட்டல்)

எங்கு பிறந்தாலும் அனைவரும் மனிதர்கள்தான்

அதுமாதிரி பிரம்மாவின் முகத்திலே பிறந்தாலும், தோளிலே பிறந்தாலும், தொடையிலே பிறந்தாலும், காலிலே பிறந்தாலும் எல்லோரும் மனிதன்தான் என்கின்ற அந்த எண்ணத்தை இன்றைக்கு நாம் உருவாக்காத காரணத்தால் தான் இத்தனை சாதிச்சச்சரவுகள். இவைகளையெல்லாம் சீர்த்திருத்துவதற்கு எத்தனையோ, மகான்கள் பிறந்தார்கள். எத்தனையோ பெருமக்கள் பிறந்தார்கள். எத்தனையோ புரட்சிக்காரர்கள் பிறந்து பணியாற்றியும்கூட இன்னும் இந்தச்சமுதாயம் சீர்திருந்தவில்லை. இருந்தாலும் அதற்காக நாம் அதை விட்டுவிட்டு பின்னடையக் கூடாது. தொடர்ந்து தொண்டாற்றுவோம். எதுவும் முடியாது என்று விட்டுவிட வேண்டாம். முடிந்தவரையில் தொடருவோம், தொடருகிற வரையில் தொண்டாற்றுவோம். நம்முடைய தொண்டுக்குக் கிடைக்கின்ற மரியாதை மதிப்பு கிடைக்கட்டும். பயன் கிடைக்கட்டும். அந்தப்பயன் கிடைக்கின்ற அளவிற்கு நமக் கெல்லாம் அந்த வல்லமையை நாராயணகுருவின் வாழ்க்கை வழங்கட்டும் என்று கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு தலைவர் கலைஞர் உரையாற்றினார்.

கருத்தரங்கம்

தமிழ்த் தேசியம்

1991